# கிண்ணியா நகர சபை

## திருகோணமலை மாவட்டம்.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூலை 07 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 யூலை 02 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கிண்ணியா நகர சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்தததுடன், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிண்ணியா நகர சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,939,238 ஆகும்.

### 1.3.2 கணக்கய்விற்கான சான்றுகளின்மை

#### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத அதேவேளை அக்கணக்காய்வு ஐயவினாக்களுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக் கூடிய பெறுமதி ரூபா 3,108,822 ஆகும்.

#### (ஆ) தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை

கணக்காய்விற்குச் அவசியமான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 580,233 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் நோக்கங்களுடன் இணங்காமைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நகர சபைக் கட்டளைச் சட்டம் (255 ஆவது அத்தியாயம்) | |
| (i) 74 ஆம் பிரிவு | நகர சபைப் பிரதேசத்தில் கட்டிட நிர்மாணங்களின் போது வீதி எல்லையினைக் கருத்திற் கொள்ளாது நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) 121 மற்றும் 125 ஆம் பிரிவுகள் | அதிகாரமின்றிய கட்டிடங்கள் மற்றும் சுத்தப்படுத்தப்படாமை போன்றவைகள் தொடர்பாக பரீட்சிப்புக்கள் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நகர சபை நிருவாக விதிகள் | |
| (i) 90 ஆம் பிரிவு | பொதுப்பாதைகளில் ஒலியினால் தொந்தரவுகளை ஏற்படுத்தும் விடயங்கள் |

| | | |
|---|---|---|
| | | தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 73 ஆம் பிரிவு | பொதுப் பாதைகளை உபயோகிக்கும் விசேட பாவனையாளர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 106 ஆம் பிரிவு | பொதுக்காண்களை துப்பரவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) முாகாண சபை நிதி விதிகள்

| | | |
|---|---|---|
| (i) | இல. 110 | நட்டப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை |
| (ii) | இல. 133 | உள்ளகக் கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | இல. 845 | தொலைபேசிப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| (iv) | இல. 880 | காசு, களஞ்சியம் என்பவைகளுக்குப் பொறுப்பானவர்கள், காசோலைகள் மற்றும் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களில் கையொப்பபடும் உத்தியோகத்தர்கள் போன்றவர்களினால் பிணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | ரூபா 12,829 கூட்டுத் தொகையான நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நகர சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,289,307 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 334,135 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 436 | 382 | 2,038 | 450 | 164 | 2,186 |
| (ii) | வாடகைகள் | 7,050 | 8,484 | - | 7,370 | 2,867 | 1,873 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,117 | 483 | 3,528 | 635 | 556 | - |
| (iv) | வேறு வருமானங்கள் | 2,676 | 747 | -- | 21,190 | 12,410 | - |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள்

பல்வேறு கட்டளைகளின் கீழ் திருகோணமலை நீதவான் நீதி மன்றத்தால் 2010 திசெம்பர் 31 வரை சேகரிக்கப்பட்டு பிரதம செயலாளர் / மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 181,262,095 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களைப் பெற சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. சபையினால் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப் பணங்களை கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 முரண் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 17,910 | 14,939 | 2,971 | 14,651 | 13,006 | 1,645 |
| ஏனையவை | 5,096 | 3,512 | 1,584 | 3,547 | 3,473 | 74 |
| உப மொத்தம் | 23,006 | 18,451 | 4,555 | 18,198 | 16,479 | 1,719 |
| மூலதனச் செலவினம் | 28,247 | 14,417 | 13,830 | 5,980 | 2,675 | 3,305 |
| முழு மொத்தம் | **51,253** | **32,868** | **18,385** | **24,178** | **19,154** | **5,024** |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | பற்றாக்குறை/ மேலதிகம் |
|---|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 02 | -- | 02 |
| இரண்டாம் நிலைதரங்கள் | 25 | 20 | 05 |
| ஆரம்ப தரங்கள் | 27 | 13 | 14 |
| ஏனைய(அமைய, தற்காலிக) | - | 43 | (43) |
| மொத்தம் | 54 | 76 | (22) |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 உபயோகமற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீகவளங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் உபயோகமற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீக வளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்டுகின்றன.

| | விடயங்கள் | விடயங்களின் எண்ணிக்கை | காலப்பகுதி | உபயோகமற்ற அல்லது குறைப்பயன்பாடுடையது |
|---|---|---|---|---|
| (அ) | நிழற்பட பிரதி இயந்திரம் கொனியா | 01 | 02 வருடங்கள் | உபயோகமற்றது |
| (ஆ) | பெக்ஸ் இயந்திரம் கனன் | 01 | | |
| (இ) | லேசர் ஜெட் அச்சிடல் இயந்திரம் | 01 | | |
| (ஈ) | கனன் நிற அச்சிடல் இயந்திரம் | 01 | | |
| (உ) | யூபீஎஸ் | 03 | | |
| (ஊ) | பிளாஸ்டிக் அலுமாரி | 02 | | குறைப்பயன்பாடுடையது |
| (எ) | மண்வெட்டி | 46 | | |
| (ஏ) | சவல் | 37 | | |
| (ஐ) | அச்சிடல் இயந்திரம் எல் இவ் - 2180 | 01 | | |

### 2.5.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,360,953 ஆகக் காணப்பட்டதுடன் 01 ஆண்டிற்கு மேலாக பெறவேண்டிய நிலுவையாக இருக்கின்ற மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 182,841 ஆகும்.

### 2.5.3 பெறவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய உத்தியோகத்தர் கடன்கள் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 800,686 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற மீதிகள் ரூபா 122,421 ஆகும்.

### 2.5.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக மெய்மையாய்வு / மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பா 31 ஆந் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 49,913,955 ஆகும்.

### 2.6 வாகனப் பயன்பாடு

சபைக்குரிய வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட வேண்டிய அவசியமான தகவல்களான பிரயாணத்தின் நோக்கம், ஓடிய தூரம், ஒரு லீற்றர் எரிபொருளுக்கான சராசரி தூரம் என்பன குறிப்பிடப்பட்டிராததுடன் மாதாந்த செயலாற்றல் பொழிப்பும் தயாரிக்கப்பட்டிருக்கவில்ல.

### 2.7 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு